

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (13.6.2024) முகாம் அலுவலகத்தில், மக்களவை கொறடாவாக நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. ராசா சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் –

# 5 மாதங்களில் 23 லட்சம் சுற்றுலாப் பயணிகள் படகுப் பயணம்!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் தகவல்!

சென்னை, ஜுன் 14 -

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தின் மூலம் நடத்தப்பட்டு வரும் படகு குழாம்களில் 2024 ஜனவரி முதல் 2024 மே மாதம் வரை 5 மாதங்களில் மொத்தம் 23,15,101 சுற்றுலா பயணிகள் படகு சவாரி மேற்கொண்டு நெஞ்சம் நிறைந்த, நீங்காத அனுபவங்களை பெற்றனர் - என சுற்றுலாத்துறை அமைச்சர் கா. ராமச்சந்திரன் தகவல் தெரிவித்தார்.

சென்னை, வாலாஜா சாலையில் செயல்பட்டு வரும் சுற்றுலா வளாக கூட்டரங்கில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தின் மூலம் நடத்தப்பட்டு வரும் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள், அமுதகம் உணவகங்கள், படகு குழாம்கள் குறித்த தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாளர்கள் மற்றும் மண்டல மேலாளர்களுக்கான ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் .கா.ராமச்சந்திரன் தலைமையில், சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சி.சமயமூர்த்தி முன்னிலையில் நேற்று (13.6.2024) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் பேசுகையில் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் தமிழ்நாட்டை இந்தியாவிலேயே சுற்றுலா பயணிகளின் விருப்பமான முதன்மை மாநிலமாக உருவாக்கும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார். ஓட்டல் தமிழ்நாடு உணவகங்களை பொதுமக்கள் எளிதில் அடையாளம் கண்டறியும் வகையில் அமுதகம் என்று பெயர் சூட்டியுள்ளார். சுற்றுலா கொள்கை 2023 ஐ வெளியிட்டு, சுற்றுலாத் துறையில் முதலீட்டாளர்களுக்கு பல்வேறு ஊக்கத் தொகை மற்றும் சலுகைகளை அறிவித்துள்ளார்கள். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் சுற்றுலாப் பயணிகளுக்கு நினைவில் நீங்காத அனுபவத்தை தரும் வகையில், சாகச படகு சவாரி மற்றும் நீர்விளையாட்டுகளுடன் கூடிய படகு குழாம்களை முட்டுக்காடு, முதலியார் குப்பம், உதகமண்டலம், பைக்காரா, கொடைக்கானல், ஏற்காடு, பிச்சாவரம், குற்றாலம் மற்றும் வாலாங்குளம் ஏரி உள்ளிட்ட 9 இடங்களில் இயக்கி வருகிறது. வாட்டர் ஸ்கூட்டர்கள், மோட்டர் படகுகள், விரைவு படகுகள், மிதிப்படகுகள், துடுப்பு படகுகள், வாட்டர் சைக்கிள்கள், குழந்தைகளுக்கான மிதிப்படகுகள் என மொத்தம் 590 படகுகள் சுற்றுலா பயணிகளுக்கு நீங்காத அனுபவங்களை அளித்து வருகின்றன. முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி புதிய படகு குழாம்கள் சுற்றுலா பயணிகளுக்காக பல்வேறு மாவட்டங்களில் அமைக்கப் பட்டு வருகின்றன.

2024 ஜனவரி மாதம் 3,92,142, பிப்ரவரி மாதம் 2,74,078, மார்ச் மாதம் 4,79,078, ஏப்ரல் மாதம் 5,36,513, மே மாதம் 6,33,290 என 2024 ஜனவரி மாதம் முதல் மே மாதம் வரை 5 மாதங்களில் மொத்தம் 23,15,101 சுற்றுலா பயணிகள் படகு சவாரி மேற்கொண்டு நெஞ்சம் நிறைந்த, நீங்காத அனுபவங்களை பெற்றனர்.

இவ்வாறு அமைச்சர் கா. ராமச்சந்திரன் தெரிவித்தார்.



சென்னை, வாலாஜா சாலையில் செயல்பட்டு வரும் சுற்றுலா வளாக கூட்டரங்கில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தின் மூலம் நடத்தப்பட்டு வரும் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள், அமுதகம் உணவகங்கள், படகு குழாம்கள் குறித்த தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில் நேற்று (13.6.2024) நடைபெற்றது. இக்கூட்டத்தில் சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சி.சமயமூர்த்தி கலந்து கொண்டார்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு - தயாநிதிமாறன் எம்.பி முன்னிலை - மருத்துவர் எச்.பிரத்யுஷா தலைமை!

# துறைமுகம் மேற்கு பகுதி சார்பில் மருத்துவ முகாம்! ஊட்டசத்து பொருட்கள்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் துவக்கி வைத்து வழங்குகிறார்.

சென்னை, ஜுன் 14 -

சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் மேற்கு பகுதி சார்பில் கலைஞர்100, 97வது நிகழ்ச்சியாக நோயற்ற வாழ்வை உருவாக்குவோம்! நூற்றாண்டு நாயகரை நாம் போற்றுவோம்! எனும் தலைப்பில் 16.06.2024, ஞாயிற்றுக்கிழமை, காலை 9.00 மணியளவில், சென்னை, ஆதியப்பன் நாயக்கன் தெரு, கன்னிகா பரமேஸ்வரி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெறுகிறது.

இம்மருத்துவ முகாமில், மருத்துவர் அணி மாவட்ட துணை அமைப்பாளர், மருத்துவர் எச்.பிரத்யுஷா தலைமை வகிக்கிறார். சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத் துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, கழக உயர்நிலை செயல்திட்டகுழு உறுப்பினர், விளையாட்டு மேம்பாட்டு அணிசெயலாளர் தயாநிதிமாறன் எம்.பி, எஸ். முரளி, எஸ்.இராஜசேகர், எம். விஜயகுமார், ஜி.மகாதேவன், பி.ஸ்ரீராமுலு எம்.சி, இசட். ஆசாத் எம்.சி, என்.பி.எம். ஷேக் அப்துல்லா, மருத்துவர் ஜி.சாந்தகுமாரி எம்.சி. ஆர். கலைச்செல்வி, எம்.இப்ராஹிம்கனி, பி.விஜயகுமார், எம். விநாயகம், பா.பிரதீப்குமார், எல்.சம்பத்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்க. பகுதி கழக நிர்வாகிகள்: மே.ஜனார்தனன், கே.ஆர். அபரஞ்சி, ம.முத்துகுமார், ந.சுந்தரம், எஸ்.சந்தியாகு, செ.தமிழ்வாணன், வி. சந்தான லட்சமி, சி.ப.ஜெயராமன். வட்டகழக நிர்வாகிகள்: ம.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.ரவிச்சந்திரன், ஜி,ராமமூர்த்தி, டி.சதீஷ்குமார், வே.பா.பிரபாகரன், எல். சத்திய நாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.ஏ. அஸ்லாம், டி.கதிரவன் (எ) ராஜா, ம.பரத்குமார், கே.கவியரசு, ஆ.நா. பார்த்திபன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இம்மருத்துவ முகாமில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மருத்துவ முகாமை துவக்கி வைத்து ஊட்டசத்து பொருட்கள் வழங்கி சிறப்பிக்கிறார்.

மேலும், இந்நிகழ்வில் சென்னை மாநகர மேயர் ஆர். பிரியாராஜன், கழக துணை அமைப்பு செயலாளர் தாயகம் கவி எம்.எல்.ஏ, அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ, ஜோசப்சாமுவேல் எம்.எல்.ஏ. மாவட்ட நிர்வாகிகள்: கோ.ஏகப்பன், தேவஜவகர், புனிவதி எத்திராசன் எம்.சி, துறைமுகம் தொகுதி மாமன்ற உறுப்பினர்கள்: ராஜேஷ் ஜெயின், வெ.பரிமளம், எல்.நவீன். ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

57(அ) வட்ட செயலாளர் பா.அண்ணாதுரை நன்றி கூறுகிறார்.

### ஜுன் 15-ல் கோவையில் முப்பெரும் விழா!

# சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் பெருந்திரளாக பங்கேற்பீர்!

## மாவட்டச் செயலாளர் நே. சிற்றரசு அறிக்கை!



சென்னை, ஜுன் 14

சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் நே.சிற்றரசு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் 40க்கு 40 நாடாளுமன்ற தொகுதிகளிலும் வரலாற்று சிறப்புமிக்க வெற்றியை தந்த தமிழ்நாடு நன்றி தெரிவிக்கும் விழாவும், இம்மாபெரும் வெற்றிக்கு தமிழகமெங்கும் மக்களை சந்தித்து, இந்திய துணை கண்டமே வியக்கும் அளவிற்கு பரப்புரை செய்து, கழகத்தை வழிநடத்திச் சென்ற தமிழக முதல்வர் கழக தலைவர் அவர்களுக்கு பாராட்டு விழா என முப்பெரும் விழா நாளை (15.06.2024 - சனிக்கிழமை) கோவையில் நடைபெறுகிறது.

"இந்தியா" கூட்டணிக்கு தமிழ்நாட்டில் நூறு சதவிகித வெற்றிக்கு பாடுபட்ட கழக தலைவர் தமிழக முதல்வர் அவர்களுக்கும், பட்டிதொட்டியெங்கும் சூறாவளி பிரச்சாரம் செய்த கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பாக நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்வதுடன், சென்னை மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் கழக வேட்பாளர் தயாநிதி மாறனை பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற உழைத்த அனைத்து கழக நிர்வாகிகளுக்கும் சென்னை மேற்கு மாவட்டக் கழகத்தின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும், கோவையில் நடைபெறும் முப்பெரும் விழாவிற்கு சென்னை மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள், மாநில நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், வட்டக் கழக செயலாளர்கள், மாமன்ற நிர்வாகிகள், அணிகளின் மாவட்ட / பகுதி / வட்ட அமைப்பாளர், தலைவர், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் பகுதி/வட்டக் கழக நிர்வாகிகள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### சென்னை கிழக்கு மாவட்டக் கழகம் கொண்டாடும்

# காலம் உள்ளவரை கலைஞர் - நூற்றாண்டு நிறைவு விழா!

## இன்றைய நிகழ்ச்சிகள் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!



**கலைஞர் 100 – 93**
**தூய்மை பணியாளர் உயரட்டும்! சூரியப் பாதையில் தொடரட்டும்!**
**நாள்: 14.06.2024, வெள்ளிக்கிழமை, காலை: 09.00 மணி**
**இடம்: சிராஜ் மகால், எழும்பூர், சென்னை.**
**தலைமை: இராஜேஸ்வரி ஸ்ரீதர், எம்.சி.,**
**அமைப்பாளர், மாவட்ட மகளிர் தொண்டரணி**
**தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும்**
**அறுசுவை உணவு வழங்குபவர் : தா.மோ.அன்பரசன்**
**( குறு, சிறு மற்றும் நடுத்தரத்தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்)**
**அன்புடன்: மாவட்ட மகளிர் தொண்டரணி, எழும்பூர் தெற்கு பகுதி**

**கலைஞர் 100 – 94**
**இருள் அகற்றிய சூரியன்! இனம் காத்த நாயகன்!**
**நாள்: 14.06.2024, வெள்ளிக்கிழமை, மாலை: 6.00 மணி**
**இடம்: வில்லிவாக்கம் பேருந்து நிலையம் எதிரில்**
**தலைமை: கூ.பி.ஜெயின், எம்.சி, பகுதி செயலாளர்**
**புகழுரைப்போர்**

| | |
|---|---|
| **பேராசிரியர்.அப்துல்காதர்** | **திரு.நாஞ்சில் சம்பத்** |
| **திராவிட இயக்க முரசம்** | **மதுக்கூர். இராமலிங்கம்** |

அமைச்சர் **பி.கே. சேகர்பாபு**
செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.

### கழக மகளிர் அணி - மகளிர் தொண்டரணியினர் திரண்டு வாரீர்!

# ஜுன் 15-ல் கோவையில் முப்பெரும் விழா பொதுக்கூட்டம்!

## ஜெ.ஹெலன் டேவிட்சன் - நாமக்கல் ப. ராணி வேண்டுகோள்

சென்னை, ஜுன் 14-

கழக மகளிர் அணி செயலாளர் ஜெ.ஹெலன் டேவிட்சன், கழக மகளிர் தொண்டரணி செயலாளர் நாமக்கல் ப.இராணி ஆகியோர் கூட்டாக விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

நாளை (ஜுன் 15ஆம் தேதி) மாலை 4.00 மணியளவில் கோயம்புத்தூர், கொடிசியா மைதானத்தில் தமிழ்நாடு முதலமைச்சரும், கழகத் தலைவருமான தளபதியார் அவர்களின் தலைமையிலும் மற்றும் கூட்டணிகட்சித்தலைவர்களும் கலந்து கொள்ளும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா, நாற்பது நாடாளுமன்றத் தொகுதிகளிலும் வெற்றியளித்த தமிழக மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழா, சீர்மிகு வெற்றிக்கு கழகத்தை வழிநடத்திச் சென்ற தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களுக்கு பாராட்டு விழா என "முப்பெரும் விழா" பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது.

ஆகவே இக்கூட்டத்தில் மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர், ஊராட்சிக் கழக மகளிர் அணி, மகளிர் தொண்டரணி நிர்வாகிகள் மற்றும் உள்ளாட்சி மன்ற நிர்வாகிகள், கழக மகளிர் அணியினர் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அழைக்கின்றோம்.

இவ்வாறு அவர்கள் தங்கள் அறிக்கையில் கூறியுள்ளனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 101வது பிறந்தநாள் முன்னிட்டு சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் மேற்கு பகுதி 38(அ) வட்டத்தில் உள்ள உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆட்டோ ஓட்டுநர் சங்கத்தின் சார்பாக சுமார் பொதுமக்கள் 500 நபர்களுக்கு அறுசுவை பிரியாணி வழங்கப்பட்டது. இதில் எஸ்.எல்.சுந்தர் தலைமை வகித்தார். இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, ஜே.ஜே.எபிநேசர் எம்.எல்.ஏ, பகுதி செயலாளர் எஸ்.ஜெபதாஸ் பாண்டியன், மண்டலக் குழுத் தலைவர் நேதாஜி யு.கணேசன், ஆகியோர் பொது மக்களுக்கு பிரியாணி வழங்கபட்டது.உடன் பி.சீனிவாசன், எம்.விமலா, எம்.குருவா, ஆர்.சுந்தர்ராஜ், மெடிக்கல் எ.ஆனந்த், கே.சிவா, எ.வீரா, டி.அனில்குமார், பி.தாமு, ஆர்.அம்மு, கே.ஈஸ்வரி, சோபனா, ராஜேஸ்வரி, மற்றும் ஆட்டோ சங்க நிர்வாகிகள் சீனிவாசன், கார்த்தி, ஹனிஃபா, காமராஜ், அய்யனார், கந்தா, குணசேகரன், கார்த்திகேயன், மொய்தின், கே.ரமேஷ், சக்திவேல், ராஜ், கண்ணன், எஸ்.எம்பெருமாள், எஸ். நாதன், என்.பாபு, ஆகியோர் கலந்து கொண்டனர்.

### திருவண்ணாமலை வடக்கு மாவட்டம்

# மாவட்ட அவைத்தலைவர் பொறுப்புக்கான தேர்தல்

# வேட்பு மனுத் தாக்கல்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், திருவண்ணாமலை வடக்கு மாவட்ட அவைத்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட அ.இராஜேந்திரன் அவர்கள் மறைவெய்திய காரணத்தால்;

திருவண்ணாமலை வடக்கு மாவட்டம், **மாவட்ட அவைத்தலைவர்** பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து **2024, ஜுன் 17 (திங்கட்கிழமை) அன்று ரூ.25000/– வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.**

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் திருவண்ணாமலை வடக்கு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய / நகர/பேரூர் செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 13.06.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

